## சுருக்கம்

அறிவிப்புகள் – 2021 – 2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – சிறுபான்மையினர் நலன் – உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர்கள் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகையினை ஆண்களுக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.3,000/– ஆகவும் பெண்களுக்கு ரூ.2,000/–லிருந்து ரூ.5,000/– ஆகவும் உயர்த்தி வழங்குதல் – அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 62

நாள் 12.11.2021
பிலவ, ஐப்பசி 26
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது :–

1. அரசாணை (நிலை) எண்.74, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை, நாள் 24.08.2009.
2. அரசாணை (நிலை) எண்.84, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (எஸ்1)த் துறை, நாள் 18.09.2009.
3. அரசாணை (நிலை) எண்.39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (ஐ2) துறை, நாள் 28.02.2011.
4. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கடித எண்.அ6/1287/2020, நாள் 16.09.2021.

********

**ஆணை:–**

2021–2022–ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது :–

"அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று உலமா மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும் பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்."

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு உலமாக்கள் மற்றும் இதர பணியாளர்கள் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகளில் திட்டமிடப்பட்ட உறுதியான முன்னேற்றத்தை அடைவதற்கென உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்குவது போன்று பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்கான வழிமுறைகள், இவ்வாரியத்தில் உறுப்பினர்கள் பதிவு செய்வது, நலத்திட்ட உதவியினை பெறுவதற்கான விண்ணப்பிக்கும் முறை குறித்த வழிமுறைகள் (ம) படிவங்கள் குறித்தான தொகுப்புகள் வெளியிடப்பட்டன.

4. மேலே, மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம், தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர் நலவாரியம் மற்றும் இதர 14 நல வாரியங்களில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தொகை கீழ்க்கண்டவாறு உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது :-

| | | |
|---|---|---|
| 1. | ஆண்கள் திருமணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை | ரூ.2,000/-லிருந்து ரூ.3,000/- |
| 2. | பெண்கள் திருமணத்திற்கு வழங்கப்படும் உதவித் தொகை | ரூ.2,000/-லிருந்து ரூ.5,000/- |

5. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் உலமாக்கள் (ம) பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பல்வேறு நல உதவிகளில் உறுப்பினர் (அ) அவரது மகன் (அ) மகளின் திருமணச் செலவிற்கான உதவித் தொகை ரூ.2000/- என நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது என்றும், இதுவரையில் மேற்படி திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க ஒப்பளிக்கப்பட்ட ரூ.2.00 கோடியில் இதுநாள் வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள 14,842 உறுப்பினர்களில் 3,852 பயனாளிகளுக்கு ரூ.141.59 இலட்சம் செலவில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், இதில் தோராயமாக 300 நபர்களுக்கு திருமண உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன என்பதனை தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளதைப் போன்று இத்துறையின் கீழ் இயங்கி வரும் உலமாக்கள் (ம) பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் மேற்காணும் விவரப்படியான திருமண உதவித் தொகையினை ஆண்களுக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.3,000/- ஆகவும், பெண்களுக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.5,000/- ஆகவும் உயர்த்தி வழங்குமாறும், மேற்படி திருமண உதவித் தொகை உயர்த்தி வழங்கும் பட்சத்தில் இத்திட்டத்தின் கீழ் ஏற்கனவே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும் என்றும்,

மேலும், இனிவரும் காலங்களில், அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியத்தில் உறுப்பு தொழிலாளர்களுக்கும், அவர்களுடைய குடும்பத்தாருக்கும் வழங்கப்படும் பல்வேறு நலத்திட்ட உதவிகளில் மாற்றங்கள் நடைமுறைக்கு வரும் போது, அம்மாற்றங்கள் இத்துறையின் கீழ் இயங்கி வரும் உலமாக்கள் (ம) பணியாளர்கள் நல வாரியத்திற்கும் பொருந்தும் என உத்தரவு வழங்குமாறும் சிறுபான்மையினர் நல இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

6. சிறுபான்மையினர் நல இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, அதனை ஏற்று, உலமாக்கள் (ம) பணியாளர்கள் நல வாரியத்தில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் திருமண உதவித் தொகையினை ஆண்களுக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.3,000/- (ரூபாய் மூன்றாயிரம் மட்டும்) ஆகவும் பெண்களுக்கு ரூ.2,000/- லிருந்து ரூ.5,000/- (ரூபாய் ஐந்தாயிரம் மட்டும்) ஆகவும் உயர்த்தி வழங்க அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு திருமண உதவித் தொகையினை உயர்த்தி வழங்குவதால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை இவ்வாரியத்திற்கான ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

7. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு எண்.48136/பி.மி.பி.(ம) சிந/2021, நாள் 09.11.2021-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், சிறுபான்மையினர் நலன், சென்னை – 5.
இயக்குநர், பிற்படுத்தப்பட்டோர் நலன், சென்னை – 5.
ஆணையர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நலன், சென்னை – 5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரியத்தின் தலைவர் மற்றும் அனைத்து அலுவல் சாரா உறுப்பினர்கள் (உலமாக்கள் மற்றும் பணியாளர்கள் நல வாரிய உறுப்பினர்-செயலர் வழியாக)
அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள்.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை, சென்னை – 9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் (ம) பேரிடர் மேலாண்மைத் துறை, சென்னை – 9.
அரசு செயலாளர், சமூக நலம் (ம) சத்துணவுத் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 9.
அரசு முதன்மைச் செயலாளர், உயர் கல்வித் துறை, சென்னை – 9.
ஆணையர், தொழிலாளர் நலத்துறை, சென்னை – 6.
முதன்மைச் செயல் அலுவலர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை-1.

இயக்குநர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார
மேம்பாட்டுக் கழகம், சென்னை – 2.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
மாநிலக் கணக்காயர் (தணிக்கை–I&II), சென்னை–18.
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 5.

<u>நகல் :–</u>
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 9.
மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
நிதித் (பி,மி,பி/வரவு/செலவு /பொது – 1&2/வ.வ–1)) துறை, சென்னை– 9
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்